# தீர்க்கதரிசனம் நிறைவேறுதலின் வருடம்

***....கர்த்தருடைய* கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று நீ இப்பொழுது காண்பாய் என்றார்.** (எண்.11:23)

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். 430 வருடங்களாக எகிப்தில் அடிமைகளாக இருந்த அவர்களை தேவன் விடுவித்து வெளியே கொண்டு வந்தார். அவர்களை வனாந்திரத்திற்கு கொண்டு வந்து, சீனாய் மலையில் அவர்களோடுகூட உடன்படிக்கை செய்து, தன்னுடைய சொந்த சம்பத்தென்று அழைக்கிறார். அவர்கள் செங்கடலை கடந்தபின், அவர்களை ஒரு தேசமாக நிலைநிறுத்த விரும்பி, ஜனத்தொகையை கணக்கெடுக்கும்படி மோசேயிடம் தேவன் கூறுகிறார். எனவே வேதாகமத்தின் 4வது புத்தகம் **"எண்ணாகமம்"** என்றழைக்கப்படுகிறது. பாலும் தேனும் ஓடுகிற வாக்குத்தத்த தேசத்திற்கு செல்லுகிற வழியில், வனாந்திரத்தில் அவர்களை நடத்தும்படியாக மேகஸ்தம்பம் முன்சென்றது.

**<u>இன்னும் அதிகமாக பெற்றுக் கொள்ள, நன்றி சொல்லுதல் மட்டுமே வழி:</u>**

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பரலோக உணவாகிய மன்னாவை அனுப்பி போஷித்தார். அது பரலோகத்தில் ஆயத்தம்பண்ணப்பட்டு, பரலோகத்தி லிருந்து வந்த உணவு. அது தூதர்களின் உணவு. அதை தேவன் அனுதினமும் அவர்கள் தங்கியிருந்த பாளையத்திற்குள் மழையாக பெய்ய வைத்தார். அவர்கள் அதை அரைத்து வேக வைத்து அல்லது அப்பங்களாக சுட்டு பயன்படுத்துவார்கள். அது மிக ருசியுள்ளதா யிருந்தது. கீழ்க்கண்ட வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, பரலோகத்தின் சமையலறையிலிருந்து அந்த மன்னாவை விசேஷ கவனம் எடுத்து தேவன் ஜனங்களுக்கு அனுப்பினதை புரிந்து கொள்ள முடியும்:

*மன்னா கொத்துமல்லி விதையைப்போலவும், அதின் நிறம் முத்துப் போலவும் இருந்தது. ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக் கொண்டு வந்து, ஏந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது பானைகளில் சமைப்பார்கள். அதை அப்பங்களுமாகச் சுடுவார்கள். அதின் ருசி புது ஒலிவ எண்ணையின் ருசி போலிருந்தது. இரவிலே பாளயத்தின்மேல் பனிபெய்யும்போது, மன்னாவும் அதின்மேல் விழும்.* (வசனம் 7-9)

ஒரு வருடத்திற்கு மேலாக அந்த பரலோக மன்னாவை புசித்து வந்த ஜனங்கள் உணவிலே ஒரு மாற்றம் வேண்டுமென மாம்சத்தை விரும்பினார்கள். அதாவது அவர்கள் வயிறு விரும்பினது. அந்த வனாந்திரத்தில் ஒவ்வொரு நாளும் இவ்வளவு அற்புதமான, புத்தம் புதிதான உணவு கிடைப்பது என்பது ஒரு அதிசயமே. இப்பொழுது அவர்கள் இறைச்சிக்காக கேட்டார்கள். அங்குதான் பிரச்சினை உண்டானது. இதுவரை அவர்களுக்கு இப்படிப்பட்ட அற்புதமான உணவைத் தந்த தேவனுக்கு ஒரு வார்த்தை கூட நன்றி சொல்லவில்லை, நன்றி நிறைந்தப் பாடல் பாட அவர்களுக்குத் தோன்றவில்லை. அவர்கள் கொஞ்சமும் நன்றியுணர்வு இல்லாதவர்களாக இருந்தார்கள். அதற்கு பதிலாக அவர்கள் முறுமுறுத்தார்கள், குறை சொன்னார்கள், மேலும் எகிப்தில் இதை விட நல்ல உணவை சாப்பிட்டோமே என்று அழுதார்கள். அங்கு அவர்கள் மாட்டிக் கொண்டிருந்த சிறையிருப்பின் கசப்பான அனுபவங்களைக் குறித்து மறந்து போனார்கள். உணவை மட்டுமே நினைத்தார்கள். என்னே பரிதாபம்!

தேவன் அவர்களுக்கு மிகவும் விலையேறப்பெற்ற பரலோக ஆசீர்வாதங்களைக் கொடுத்திருந்தார். மன்னா, அவர்கள் வனாந்திரத்தில் நடந்து வாக்குத்தத்த தேசத்தை அடையத் தேவையான பரிபூரண ஆரோக்கியத்தை அவர்களுக்குக் கொடுத்தது. அவர்களோ உலகத்துக்கடுத்த காரியங்களையே நாடினார்கள். நன்றியுள்ளவர்களாக இருப்பதை மறந்து, முறுமுறுக்கத் தொடங்கினார்கள். எண்.11:10 கூறுகிறது: *அந்தந்த வம்சங்களைச் சேர்ந்த ஜனங்கள் தங்கள் தங்கள் கூடார வாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்டான். கர்த்தருக்கு மிகவும் கோபம் மூண்டது. மோசேயின் பார்வைக்கும் அது பொல்லாப்பாயிருந்தது.* மோசேயின் பார்வைக்கு அது பொல்லாப்பாயிருந்தது, தேவனுக்கு அது கோபத்தை மூட்டியது. இறைச்சியைக் கேட்டது பாவமல்ல. அவர்களுடைய நன்றியில்லாத இருதயம்தான் பிரச்சினை.

நம்முடைய வாழ்க்கையில் இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களை தேவனிடமிருந்து பெற, தேவனுக்கு நன்றி சொல்லுதல் மட்டுமே வழியாகும். *கர்த்தரைத் துதிப்பதும், உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவதும், பத்து நரம்பு வீணையினாலும் தம்புருவினாலும் தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும் காலையிலே உமது கிருபையையும் இரவிலே உமது சத்தியத்தையும் அறிவிப்பதும் நலமாயிருக்கும்.* (சங். 92:1-3) ஒவ்வொரு நாள் காலையிலும் இரவிலும் எல்லா வேளையிலும் தேவனுக்கு நன்றி சொல்வதை பயிற்சி செய்வது அவசியம். உங்கள் சூழ்நிலை எப்படி இருந்தாலும், தேவனைத் துதிப்பதை மாத்திரமே உங்கள் இலக்காக வைப்பீர்களானால், தேவன் உங்கள் முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணுவார். சங். 34:1 கூறுகிறது: *கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.* நன்றி கூறுவதின் மூலம் நீங்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பீர்களானால், தேவன் உங்கள் இருதயத்தின் வேண்டுதல்களை யெல்லாம் நிறைவேற்றி அருள் செய்வார். (சங். 37:4) நன்றி கூறுதல் தேவனுடைய இருதயத்தைப் பிரியப்படுத்துகிறது, இன்னும் மேன்மையான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள வழி செய்கிறது.

**<u>தனிப்பட்ட விருப்பங்களுக்கு முன்பாக தேவ ராஜ்யத்துக்குரிய காரியங்களை முன் வைத்தல் :</u>**

_________தேவனுக்கும் அவருடைய ராஜ்யத்தின் காரியங்களுக்கும் முதலிடத்தைக் கொடுத்தல் என்பது நமது வாழ்க்கையில் வெற்றியை எளிதாக பெற வழியாகும். இஸ்ரவேல் ஜனங்கள் இறைச்சிக்காக அழுது கொண்டிருந்தபோதும், மோசே ஜெபித்த ஜெபத்தில்தான் தேவனுடைய கவனம் இருந்தது. தேவனுடைய ஜனங்களைக் குறித்து தான் கொண்டுள்ள பாரத்தை பகிர்ந்து கொள்ளக்கூடிய அதிகமான ஊழியர்களை எழுப்ப வேண்டுமென்பதுதான் மோசே ஜெபித்த ஜெபம். தேவ ஜனங்களுக்கு ஊழியம் செய்யும்படியாக, மோசேயின் பாரத்தை சுமக்கக்கூடிய இன்னும் 70 பேர்களை இஸ்ரவேலில் எழுப்ப தேவன் விரும்பினார். அதுவரை, மோசே மட்டுமே தேவ ஜனங்களைக் குறித்த முழு பாரத்தையும் சுமந்து கொண்டிருந்தார். இதற்கு முன்மோசேயுடன் இருந்து வந்த தலைவர்கள் அவருடைய பாரத்தையும், அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் வெறுமனே வேலை செய்கிறவர்களாக காணப்பட்டார்கள். இது திருச்சபையின் மீதும். தொலைந்து போன ஆத்துமாக்களின் மீதும் கொண்டிருக்கிற பாரத்தின் அபிஷேகம்.

தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார்: *அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள்இன்னார் என்று அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபது பேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக்கூடாரத்தினில் அங்கே உன்னோடேகூட வந்து நிற்கும்படி செய். அப்பொழுது நான் இறங்கி வந்து, அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன் மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல், உன்னோடேகூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்.* (எண்.11:16,17)

தேவன் சொன்னதை அப்படியே மோசே மறுநாளில் செய்தபோது, தேவன் மேகத்தில் இறங்கி வந்து, மோசே மீது இருந்த அபிஷேகத்தை அந்த 70 பேர் மேலும், அதில் இரண்டு பேர் பாளயத்தில் இருந்தபோதும், அவர்கள் மேலும் ஊற்றினார்.(எண்.11:25) பின்பு தேவன் இறைச்சிக் குறித்த காரியத்துக்கு பதில் கூறினார். இந்த உலகத்தில் தேவராஜ்யமும், அதைக் குறித்தத் தேவைகளுமே தேவனுடைய பார்வையில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவைகள். இதை புரிந்து கொள்ளாத அநேகர், பல காரியங்களைச் செய்ய முயற்சி செய்து இறுதியில், பலன் ஒன்றும் கிடைக்காமல் அவர்களுடைய வாழ்நாட்களை ஏமாற்றத்துடன முடித்து விடுகின்றனர். தேவனுடைய விருப்பங்களை தன்னுடைய விருப்பமாக் கொண்டு செயல்படுகிற எந்த மனிதனும் நிச்சயமாக ஒரு நட்சத்திரமாக ஜொலிப்பான். நெகேமியாவைப் பாருங்கள். ஒரு ராஜாவின் பானபாத்திரக்காரனான அவர், எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவதில் விடாமுயற்சியுடன் வைராக்கியமாக செயல்பட்டார். அவர் கேட்காமலேயே யூதா தேசத்தின் அதிபதியாக (governor) உயர்த்தப்பட்டார் (நெகே.5:14).

உங்களது குடும்பப் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகள், எதிர்கால பிரச்சினைகளைக் குறித்துக் கவலைப்படுவதை நிறுத்துங்கள். வேதம் கூறுகிறது: *தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்* (யோ.3:16). தேவனுக்கடுத்தக் காரியங்களின் மேல் கரிசனை கொள்ளத் தொடங்குங்கள். நீங்கள் ஒரு நட்சத்திரமாக ஜொலிக்கத் தொடங்குவீர்கள். தொலைந்து போன ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தினாலும், கிருபையினாலும் உங்களை நிரப்பும்படியாக தேவனிடத்தில் கேளுங்கள். முழு இருதயத்துடன் தேவனுக்காக ஊழியம் செய்யத் தொடங்குங்கள்; அதின் ஆசீர்வாதத்தைப் பார்ப்பீர்கள்.

**<u>தேவன் சொல்வதையே சொல்லுங்கள், அது நிச்சயம் நிறைவேறும் :</u>**

_________*அதற்குக் கர்த்தர் மோசேயை நோக்கி; கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று நீ இப்பொழுது காண்பாய் என்றார்.*(எண்.11:23)

ஆவிக்குரிய அனுபவம் உண்டானபின், சரீரப்பிரகாரமான அற்புதங்கள் கட்டவிழ்க்கப்படத் தொடங்குகிறது. ஜனங்களின் இறைச்சிக்கான அழுகை சத்தத்தைக் கேட்டபோது, தேவனுக்குக் கோபம் எழும்புகிறது. ஆனால் முதலில், தனது ஊழியக்காரனாகிய மோசேயின் அழுகைக்கு பதிலை கொடுத்தார். ஜனங்கள் அந்த மாதம் முழுவதும் இறைச்சி சாப்பிடுவார்கள் என்று தேவன் சொன்னார். அது எப்படி நடக்க முடியும் என்று மோசே கேட்ட கேள்விக்கு தேவன் மேற்கண்ட பதிலைக் கூறுகிறார். நான் சொன்னது நடக்குமோ நடவாதோ என்று நீ இப்பொழுது காண்பாய். மோசேக்கு முன்பாக தேவன் ஒரு சவாலை அனுப்புவது போல இந்த வார்த்தைகளை சொன்னாலும், மெய்யாக தேவன் தன்னுடைய வார்த்தையின் உண்மைத்தன்மையைக் குறித்த ஒரு அழுத்தமான தீர்ப்பையும், தீர்க்கதரிசனத்தின் வல்லமையையும் குறித்தேக் கூறுகிறார். முக்கியமான குறிப்பு இதுதான்: .....***அவர் சொன்னதை...... நீ காண்பாய்.***

ஆறு லட்சத்திற்கும் அதிகமான ஆண்கள், பெண்கள், சிறு பிள்ளைகளுக்கு இறைச்சியை கொடுப்பது என்பது கற்பனைக்கு எட்டாத கடினமான காரியமாயிருந்தாலும், அது நடக்கப்போகிறது என்று தேவன் கூறுகிறார். அதை விசுவாசிக்கும்படி மோசேயை அவர் வலியுறுத்துகிறார். அதே வார்த்தைகளை ஜனங்களிடம் பேசும்படி மோசேயிடமும் கூறுகிறார். மோசேயும் அதை அப்படியே செய்கிறார். எண்.11:24 கூறுகிறது: *அப்பொழுது மோசே புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லி....* தேவன் சொன்னதை மோசேயினால் புரிந்து கொள்ள முடியவில்லையென்றாலும், அவர் சொன்னதை ஜனங்களின் காதுகள் கேட்க அறிக்கையிடுகிறார். அதின் பலனைக் கண்களால் கண்டார்.

*அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு காற்று சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்துக் கொண்டு வந்து, பாளயத்திலும், பாளயத்தைச சுற்றிலும், இநதப் பக்கம் ஒருநாள் பிரயாணம் மட்டும், அந்தப்பக்கம் ஒரு நாள் பிரயாணம்மட்டும். தரையின் மேல் இரண்டு முழ உயரம் விழுந்துக் கிடக்கச் செய்தது.* (எண்.11:31)

தேவன் சொல்வதை உங்களால் புரிந்து கொள்ள முடியாமல் போகலாம். ஆனால் உங்களால் விசுவாசிக்க முடியும். தேவன தன்னுடைய வார்த்தையை தன்னுடைய வல்லமையினால் பெலப்படுத்துகிறார். அவர் சொல்வதை அவர் நிறைவேற்றுகிறார். அவர் தோற்றுப் போக முடியாது. அவர் பொய் சொல்ல மனிதனல்ல, மனம் மாற மனுபுத்திரனுமல்ல. அவர் யாக்கோபிடம் கூறுகிறார்: ...நான் உனக்குச் சொன்னதை செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை (ஆதி.28:15) ஆம், அவர் மோசேயிடம் சொன்னதை நிறைவேற்றினது போல, யாக்கோபிடம் சொன்ன அவர் வார்த்தையை நிறைவேற்றினார். ஒவ்வொரு மனிதனும் தலா 1900 காடைகளைக் கொண்ட, 235 எடையுள்ள 10 ஓமர் அளவு காடைகளை பொறுக்கிக் கொண்டார்கள். அந்த வனாந்திரம் ஒரு இறைச்சிக் கடையாய் மாறிப்போனது. தேவனுடைய தீர்க்கதரிசன சத்தத்துக்காக நன்றி.

இந்த காலம், தேவன் தன்னுடைய தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிற பரிமாணத்தை வெளிப்படுத்துகிற காலம். தேவன் தனது ஆவியானவர் மூலமாக உங்கள் இருதயத்தில் பேசுகிற அமர்ந்த மெல்லிய சத்தத்திற்கு செவிகொடுத்து, அதை விசுவாசத்துடன் அறிக்கையிடுங்கள். அவருடைய வார்த்தைக்கு உருவாக்கும் வல்லமையஉண்டு. நீங்கள் அதின் ஆசீர்வாதத்தைக் கண்டு, தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய ராஜ்யத்தைக் கட்டுகிறவர்களாகுங்கள். நீங்கள் வாலாகாமல், தலையாக்கப்படுவீர்கள்.

**உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை:**

இந்தப் பாடலின் வரிகளை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். கிறிஸ்துவின் பிறப்பு பூமியிலும் பரலோகத்திலும் எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டு பண்ணுகிறது என்பதை இந்தப் பாடல் விளக்குகிறது. கிறிஸ்து பிறந்த அந்த நேரம் தேவனுக்கு மகிமையை உண்டுபண்ணுகிறது. தேவன் மனித உருவெடுத்த பிறப்பது என்பது தேவனுடைய மகிமை மிக அற்புதமான விதத்தில் வெளிப்படுத்தப்படுவதைக் குறிக்கறது. என்றும் அழிவில்லாத தேவன் அழியக்கூடிய மனிதனாக உருவெடுக்க முடியம் என்பது கிறிஸ்து பிறக்கும்வரை சாத்தியமற்ற ஒரு காரியமாகவே இருந்தது. பழைய ஏற்பாட்டில், தேவன் ஆபிரகாம், மனோவா, சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ போன்றவர்களுக்கு தன்னை மனித ரூபத்தில் வெளிப்படுத்தியிருந்தாலும், பசி, தாகமுடைய, களைப்படையக்கூடிய ஒரு மனிதனாக வெளிப்பட்டதில்லை. கிறிஸ்து தன்னை வெறுமையாக்கி அடிமையின் ரூபம் எடுத்தபடியால், தேவன் இந்த அதிகமான மகிமையைப் பெற்றுக் கொண்டார்.

**பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும்:**

மனிதர்கள் மத்தியில் சமாதானத்தை கூறவே இயேசு வந்தார். அவர் பூமியில் வாழ்ந்த நாட்கள் முழுவதும் மனிதர்கள் மத்தியில் சமாதானத்துக்குக் காரணராகவே வாழ்ந்தார். அவர் ஏசாயா தீர்க்கதரிசியினால் சமாதானபிரபு என்றழைக்கப்பட்டார் (ஏசா. 9:6). பாவம் செய்த மனிதன் அதற்காக மனஸ்தாபப்படும்போது, கிறிஸ்துவின் பிறப்பினால் தேவனுடைய பிரியம் அவனுக்குக் கிடைக்கிறது என்று வேதம் கூறுகிறது. இது எப்படி சாத்தியம்? ஏனெனில் கிறிஸ்து மத்தியஸ்தராக – தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு மாட்சிமையின் பாலமாக இருந்து இணைக்கிறார்.

**பாலம்– ஓர் விளக்கம்:**

இரண்டு சமவெளிகளுக்கு இடையே நதி பாயும்போது, அந்த இரண்டு சமவெளிகளும் அந்த நதியின் தண்ணீரினால் பிரிக்கப்பட்டிருக்கும். இருபக்கங்களிலுள்ள ஜனங்களும் ஒருவரோடொருவர் சேர முடியாதபடி பிரிந்திருப்பார்கள். அதின் ஒருபக்கத்தில் வியாதியஸ்தன் இருந்து, மறுபக்கத்தில் மருத்துவமனை இருக்குமானால், அவன் மருத்துவம் பெறும்படி அந்த நதியை கடக்க வேண்டியது அவசியம். அலுவலகம் நதியின் ஒரு பக்கம் இருந்து, மறுபக்கத்தில் அதில் வேலை செய்கிறவர் இருப்பாரானால், அங்கு வேலை செய்து, தன்னுடைய வருங்கால கனவுகள் நனவாகும்படியாக சம்பாதிக்கும்படியாக நதியை கடந்தாக வேண்டும். ஒரு குழந்தை பசியோடு நதியின் இந்தப் பக்கத்திலும், ரொட்டிக்கடை அந்தப் பக்கத்திலும் இருந்தால், ரொட்டியை வாங்கிப் பசியாற, மறுபக்கம் சென்றே ஆக வேண்டும். இப்போது பாலத்தின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும். பாலம் இருபக்கங்களை இணைக்கிறது. இது ஜனங்களை அவர்களுக்குத் தேவைப்படுகிற ஆதாரத்தோடு இணைக்கிறது. மனிதனை, தன்னை சிருஷ்டித்த தேவன், அன்பின் தேவன், சுகமளிக்கும் தேவன், போஷித்து நடத்துகிற தேவனோடு இணைக்கிற மத்தியஸ்தர் தான் இயேசு. பாலம் இல்லாமல் அடுத்த பக்கத்தை அடைவது எப்படி கடினமான காரியமோ, அதுபோல கிறிஸ்து இல்லாமல் மனிதன் தன்னை உண்டாக்கின தேவனோடு இணைவது கூடாத காரியம். இயேசு தன்னுடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மூலம் அநேகருக்கு நன்மைகள் செய்து, வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கி, அசுத்த ஆவிகளின் பிடியில் சிக்கியிருந்தவர்களை விடுதலை செய்து, நொறுங்குண்டவர்களின் கண்ணீரை துடைத்தார்.

**அவருடைய மரணத்தின் மூலம் நமது பாலமானார்:**

*அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.* 2 கொரி. 5:19

இயேசு ஏறக்குறைய முப்பத்து மூன்றரை வயதானபோது, மனித இனத்தின் பாவத்துக்காக மரிக்கும்படியாக சிலுவை சென்றார். அவர் பாவமே அறியாதவராயிருந்த போதும், மனித இனத்தின் எல்லா பாவமும் அவர் மேல் சுமத்தப்பட்டு

அவர் பாவமானார். பின்பு அந்த பாவங்களுக்கான தண்டனையை பெற்றுக் கொண்டு, மனிதன் மீட்கப்படும்படியாக அவர் பலியானார். இயேசு தன்னுடைய இரத்தத்தை சிலுவையில் சிந்தினதினால், தேவனுக்கு மனிதன் மேல் இருந்த கோபாக்கினை நீங்கிப்போனது. இதுவே பாவ நிவிர்த்தி பலி. நிவிர்த்தி என்பது ஒருவருடைய கோபத்தை தணிக்கிற பலி அல்லது வெகுமதி. இயேசு தியாகப்பலியானதினால், பாவம் நிறைந்த மனித இனம் பாவமேயில்லாத தேவனுடன் ஒப்புரவானது. மேலும் வேதம் கூறுகிற காரியம்: ....இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். ....இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறார். எப்படிப்பட்ட மகிமையான அனுபவம்! (ரோ.3:23-25, 2 கொரி. 5:21) இயேசு பாலமாக இருந்து, சிலுவையில் அடிக்கப்பட்டு, இரத்தத்தை சிந்தி மரித்ததினால் இந்த மகிமையான அனுபவம் நமக்கு கிடைத்திருக்கிறது. கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படும்போது, நீங்கள் **தேவனால் மீட்கப்பட்டவர்கள்** என்றழைக்கப்படுகிறீர்கள். நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி மற்றும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அவருக்கு விசேஷமான ஜனங்கள். நீங்கள் அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளிக்கு அவருடைய புண்ணியங்களை அறிவிக்க அழைக்கப்பட்டவர்கள் (1 பேது. 2:9).

**அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் பாலமாக விளங்கும் இயேசு:**

*மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக் கிறார்.*

(எபி. 7:25)

இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து பரமேறுமுன், 40 நாட்கள் சீஷர்களுக்கு தான் உயிர்த்தெழுந்ததை அவர்களுக்கு நிரூபித்து, பரலோக ராஜ்யத்தைக் குறித்து பேசி, அவர்களுக்கு பெரிய கட்டளையை கொடுத்தார். பின் அவர் பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்தார் என்று வேதம் கூறுகிறது. (மாற்கு 16:19) அவர் அங்கு என்ன செய்தார்? தேவனை விசுவாசித்து அவரிடத்தில் வருகிறவர்களுக்கும், தேவனுக்கும் **பாலமாக** இருந்து, அங்கும் அவர் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை செய்து வருகிறார். அவர் மிகவும் சிறந்த பரிந்து மன்றாடுகிற ஜெப வீரர். இயேசு பரலோகத்தில் செய்து கொண்டிருக்கும் ஊழியத்தின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பிசாசு குற்றப்படுத்துகிறவன். யோபை பழைய ஏற்பாட்டில் குற்றப்படுத்தினதுபோல கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களை அவன் இன்றும் குற்றப்படுத்துகிறான். யோபு குற்றஞ்சாட்டப்பட்டபோது, உடனடியாக தேவன் யோபை சோதிக்கிற சவாலை ஏற்றுக் கொண்டார். யோபு பிசாசினால் மிக மோசமாக சோதிக்கப்பட்டார், பெருந்துயரத்தினால் கதறினார் – *எங்கள் இருவர்மேலும் தன் கையை வைக்கத்தக்க மத்தியஸ்தன் எங்களுக்குள் இல்லையே* (யோபு 9:33). தேவனுக்கும் தனக்கும் இடையில் ஒரு மத்தியஸ்தர் இல்லையே என்று யோபு துயரத்துடன் கூறுகிறார். தன்னுடைய உத்தமத்திலே நின்று இறுதியில் யோபு ஜெயிக்கும்வரை பிசாசு அவனுக்கு அழிவின் மேல் அழிவை ஏற்படுத்தினான். ஒரு மத்தியஸ்தர் அங்கு இருந்திருப்பாராகில் என்ன நடந்திருக்கும் என்பதையும் யோபு கூறுகிறார்: ஆயிரத்தில் ஒருவராகிய சாமாசி பண்ணுகிற தூதனானவர் மனுஷனுக்குத் தம்முடைய நிதானத்தை அறிவிக்கும்படிக்கு அவனுக்கு அநுசாரியா யிருந்தாரேயாகில் அவர் அவனுக்கு இரங்கி, அவன் படுகுழியில் இறங்காதபடிக்கு, நீர் அவனை இரட்சியும். மீட்கும் பொருளை நான் கண்டுபிடித்தேன் என்பார். அப்பொழுது அவன் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப் பார்க்கிலும் ஆரோக்கியமடையும்; தன் வாலவயது நாட்களுக்கு திரும்புவான். அவன் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணும்போது, அவன் அவருடைய சமூகத்தைக் கெம்பீரத்தோடே பார்க்கும்படி அவர் அவன் மேல் பிரியமாகி, அந்த மனுஷனுக்கு அவனுடைய நீதியின் பலனைக் கொடுப்பார்.

இக்காலங்களில், யோபு குறிப்பிட்ட அந்த சாமாசி பண்ணுகிற தூதனானவர் இயேசுவே. நாம் விழுந்துபோக நேரிடும் நேங்களில் பிசாசு நம்மை தேவ பிரசன்னத்தில் குற்றப்படுத்தினாலும், இயேசு நமக்காக பரிந்து பேசுவார் (1 யோ. 2:1) அவரே நமது வழக்கறிஞர். மேலும் அவரால் எதிரியின் கண்ணிக்கு பாதுகாக்கப்படுவது மட்டுமல்ல, முடிவு வரை நாம் காக்கப்படுவோம். அற்புதமான நமது மத்தியஸ்தருக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம் – அவரே நமது பாலம்!